(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 38.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, ஒற்றோபர் 06, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0246/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பெலிஅத்த கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0359/ '10

2.

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள,

(i) அரச தேசிய பாடசாலைகளினதும் ஏனைய அரச பாடசாலைகளினதும் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) முதலாம் வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் சகல வகுப்பு களுக்கும் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறாவிடினும் ஆகக்குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பண்டாரகம மற்றும் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) ஆங்கில மொழிப் பயன்பாடு தொடர்பான எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கென சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆகக்குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்ற இரண்டு பாடசாலைகளையாவது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) இன்றேல், இதன் பொருட்டு முன்வைக்கப்படுகின்ற மாற்றுத் தீர்வுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0385/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,—தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் இன்றுள்ள தொலைத்தொடர்பு வழங்குனர்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி நடத்துனர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர், நாட்டில் அவர்கள் கட்டிய மூலதனப்பங்கு, மற்றும் அவர்களது இலாபங்கள் ஆகியவற்றையும்,

(iii) இலங்கையில் எவ்வளயவு காலமாக அவர்கள் செயற்படுகிறார்களென்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நிலையான தொலைபேசி செயற்படுத்துனர்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி செயற்படுத்துனர்கள் மீது மாதமொன்றிற்கு விதிக்கப்படும் வரி எவ்வளவு என்பதையும்,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக, நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசி களிலிருந்து அரசாங்கம் பெறும் மொத்த வருமானத்தை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) கடந்த நான்கு வருடங்களாக, ஸ்ரீலங்கா ரெலிகொம் பெற்ற இலாபத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் சபைக்கு தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0461/ ' 10

4.

கௌரவ நூர்தீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமாகாணத்தில் குடியிருந்து தற்போது புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி, முந்தலம், வனாத்து வில்லுவ மற்றும் புத்தளம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்வாரியாக இடம்பெயர்ந்தோரை பதிவு செய்யப்பட்டுள்ள மக்களுக்கென உலக வங்கி வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு வீடமைப்புக்குமாக செலவு செய்யப்பட்ட முழுத் தொகை யாதென்பதையும்,

(iii) இக்குடியிருப்பாளர்களுக்கு வீடமைப்புக்கான நிதியுதவி வழங்குகையில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்,

(iv) இது தவணை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின் ஒவ்வொரு தவணையிலும் வழங்கப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்த உலக வங்கி வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்ட நபர்களின் பெயர், முகவரி, திகதி மற்றும் செலவுச் சீட்டு இலக்கம் ஆகியவற்றை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0485/ '10

5\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல் தொழிற்பாட்டு நீர்வள திட்டமிடல் தேசிய கருத்திட்டம் என்ற பெயரில் கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்,

(ii) அதன் நோக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி என்ற பெயரில் வேலைத் திட்டமொன்று உள்ளதாவென்பதையும்,

(iv) அதன் நோக்கம் யாதென்பதையும்,

(v) இவ்வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களுக்கான நிதி கடனாக அல்லது உதவியாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றதா என்பதையும்,

(ii) அந்நிதியை வழங்கும் நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0247/'10

6\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய தங்காலை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0435/'10

7\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) மேற்குறிப்பிட்டவற்றுள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி.), இலங்கை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் (எல்.ஐ.ஓ.சி.) மற்றும் ஏனையவர்களினால் நடத்தப்படும் நிலையங்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்,

(iii) 2010, ஜனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர் திறக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கையையும்,

(iv) எத்தரப்பினருக்கு புதிதாக திறக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்கப்பட்டன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இன் பிரகாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் கடந்த 12 மாதங்களில், மாதமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் லீற்றர் அளவை வெவ்வேறாக இவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0462/ '10

8.

கௌரவ நூர்டீன் மசூர்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டினுள் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த திருமணமாகாத ஒருவர் விவாக ஒப்பந்தம் செய்கின்ற போது ஆட்கள், ஆதனங்கள், கைத்தொழில்கள் புனர்வாழ்வளிப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற நிதி உதவி எவ்வளவென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 2010, மே மாதம் வரை புத்தளம், வனாதவில்லுவ, கல்பிட்டி, முந்தலம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த, மேற்படி நிதி உதவி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இடம்பெயர்ந்துள்ள இரண்டு குடும்பங்களுக்கிடையில் திருமண ஒப்பந்தம் ேற்கொள்ளப்படும் போது அந்த இரு சாராருக்கும் வழங்கப்படும் நிதித் தொகை மற்றும் அவ்வாறு நிதி வழங்கப்பட்டுள்ள சந்தர்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ) (iii) இன் பிரகாரம் இடம்பெற்றுள்ள விவாகங்கள் மற்றும் இடம்பெயர்நத குடும்பமொன்றின் உறுப்பினரொருவராக செய்துள்ள விவாகங்களுக்கேற்ப 2004-2010 காலத்தினுள் வழங்க்ப்பட்டுள்ள நிதித் தொகை, நிதி பெறுநர்களின் பெயர்கள், முகவரிகள், நிதி வழங்கப்பட்டுள்ள திகதிகள், செலவுறுதிச் சீட்டு இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதை மேற்குறிப்பிட்டுள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0466/ '10

9.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும், அது தொடர்பாக எதிர்க்கட்சி பொறுப்புக் கூறவேண்டும் என்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் 2010.06.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்துள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருப்பின் மீண்டும் வெற்றிகரமான முறையில் அதனைச் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0486/ '10

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்தில் தற்போதுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும் ,

(ii) அந்நிதியத்திற்கு சொந்தமான பணம் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அப்பணத்தொகையின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iv) அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்திலிருந்து லங்கா ஹோட்டல் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(ii) கொழும்பு பங்குச் சந்தையிலும் லங்கா ஹோட்டல் கூட்டுத்தாபனத்திலும் முதலீடு செய்யப்பட்டதன் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0248/ '10

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0444/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களிலே தோற்றுப்போன நிதிக் கம்பனிகளாக அறிவிக்கப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வைப்பாளர்களைப் பாதுகாப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வைப்பாளரின் பணத்தைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்படாத வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) பணம் திருப்பச் செலுத்தத் தவறிய அல்லது கடமை தவறிய கம்பனிகளையும்,

(iii) மத்திய வங்கி தலையிட்டு, எந்தக் கம்பனியும் வங்குரொத்து அடையாது என உறுதியளித்த பின்னரும் 2010.06.01 இல் எவ்வாறு IFC மற்றும் CIFC வைப்பாளர்கள் தம் சேமிப்புக்களை இழந்தார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) கம்பனி பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும்,

(ii) இந்நிதிக் கம்பனிகளின் வங்கி அறிக்கையிடல் என்று வரும் பொழுது, வேறுபட்ட பணிப்பாளர்களுக்கு வேறுபட்ட நியமங்கள் பிரயோகிக்கப்படுவது ஏன் என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0463/ '10

13.

கௌரவ நூர்தீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீள் குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் நேரடியாக அல்லது அந்த அமைச்சின் முன்மொழிவுத் திட்டத்தின் பிரகாரம் வேறு அமைச்சின் ஒதுக்கீடு களின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகள் சுயதொழிலில் ஈடுபடும் பொருட்டு ஒவ்வொரு வருடத்திலும் நடத்தப்பட்ட தையல் பாடநெறிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) மேற்படி தையல் பாடநெறிகளுக்காக ஒவ்வொரு தவணையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட யுவதிகளின் எண்ணிக்கை, இவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு தையல் பாடநெறிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, இதில் செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் அச்செலவுத் தலைப்பு யாதென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இப்பாடநெறிகளுக்கான பயிற்சியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் முகவரிகள், இவர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை யாவையென்பதை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0467/ ’10

14.

கௌரவ அஜித் பி. பெரேரா,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையில் கடமையாற்றிய பத்திரகே நிஹால் பெரேரா மற்றும் எஸ்.பி. விமலவீர ஆகியோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த எச்.ஆர்.சீ/5432/03 மற்றும் எச்.ஆர்.சீ/5798/03 ஆம் இலக்கங்களைக் கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் “உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியில் ஏனையோரை நியமித்த திகதி தொடக்கம் நியமித்து, சம்பள படிமுறைகளை இற்றைப்படுத்த வேண்டுமென” அந்த ஆணைக்குழு 2005.12.12 ஆம் திகதி விதப்புரை செய்துள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 13/2005 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கடமைப்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) மேற்கூறப்பட்டுள்ள விதப்புரைகளை அமுல்படுத்தாமை தொடர்பில் பாராளுமன்றத்தின் பொது மனுக் குழுவிற்குச் சமர்ப்பித்த மனு தொடர்பில் 2009.10.22 ஆம் திகதி எய்தப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய இவர்கள் இருவரினதும் நியமனங்கள் இதுவரை ஏன் வழங்கப்படவில்லை என்பதையும்,

(iii) பொது மனுக்குழுவானது, துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு அனுப்பிய 2009.11.24 மற்றும் 2010.02.09 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப் பட்டுள்ள கட்டளைகளை அமுல்படுத்தாமைக்கான காரணங்கள் எவையென்பதையும்,

(iv) மேற்படி குழுக்கூட்டத்தில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய உரிய நியமனங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) ஆமெனின், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0487/ ’10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் வெற்றிடமாயுள்ள கிராம உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் மேற்படி வெற்றிடங்கள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iii) இன்றேல், புதிய கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற போது விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென அரசாங்கம் முன்வைக்கும் தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) புதிய ஆட்சேர்ப்புகளுக்கான மீண்டும் போட்டிப்பரீட்சை நடத்தப்படுமா என்பதையும்.

(v) அவ்வாறாயின், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை (இல.1) ,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சரத் பொன்சேக்கா, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2010 ஓகத்து மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

2.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை (இல.2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வசந்த அலுவிஹாரே, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2010 ஓகத்து மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

பா. 36/ '10

2.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பாராளுமன்றத்தின் சகல செயற்பரப்புகளிலும் பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை மேலும் வலுப்படுத்துவதற்காக விதந்துரைகள் செய்யப்படவுள்ளதால்,

பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை மேலும் வலுப்படுத்துவது; மற்றும்

(ஆ) இதனோடு தொடர்புடைய குழு கருதுகின்றவாறான ஏனைய விடயங்கள்.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குழுவானது பின்வரும் தத்துவமுடையதாதல் வேண்டும்,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்திற் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தற்போதுள்ளவர்களான அல்லது முன்னாள் ஆளணியினரை கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்.

(4) குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்திற் கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஐந்து (05) மாதங்களினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

*3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத் தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.